மாலை முரசு

## '13' ஆம் திருத்தம் தொடர்பில் அரசின் உத்தேசம்தான் என்ன?

### பகிரங்கப் படுத்தக் கேட்கிறது சஜித்தின் கட்சி



13ஆவது திருத்தச் சட்டம் சம்பந்தமாக அரசியல் கட்சிகளின் யோசனையை அரசாங்கம் கோரியுள்ளது. 04▶

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆடி 21 ஞாயிற்றுக்கிழமை 06.08.2023 அதிர்வு 06

# சுயலாப அரசியல் செய்ய வேண்டாம்

### எம்.பிக்களுக்கு ரணில் உபதேசம்



**கொழும்பு,ஓகஸ்ட்06 நாடாளுமன்றம் வந்துள்ள மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் சுயலாப அரசியலைக் கைவிட்டு மக்கள் நலன் கருதிச் செயற்பட வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கேட்டுக்கொண்டுள்ளார்.**

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

குறுகிய வட்டத்துக்குள் இருந்துகொண்டு தீர்வு காணபது தனது நோக்கம் அல்ல என்றும், பரந்துபட்ட கலந்துரையாடல்கள் மூலம் பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவரத் தான் விரும்புகின்றார் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். 04▶

# நாணய நிதிய உதவி கிட்டுவது தாமதமாகும்

### நாடு நெருக்கடிக்குள் சிக்கும் ஆபத்து நிலை?




இலங்கைக்கு அடுத்த மாதம் கிடைக்கவுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணை உதவி திட்டமிட்டபடி கிடைக்காமல் போகலாம் என இலங்கை வடமேற்கு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் அமிந்த மெத்சில பெரேரா தெரிவித்துள்ளார்.

கடந்த மே மாத நிலைவரத்திற்கமைய, சர்வதேச நாணய நிதியம் எதிர்பார்த்த இலக்குகளில் 04▶

# மிஹிந்தலையில் சர்வ மதத் தலைவர்களும் மலையக எழுச்சிப் பேரணிக்கு வரவேற்பு



"வேர்களை மீட்டு உரிமை வென்றிட" எனும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்டு வரும் மலையக மக்களின் எழுச்சிப் பயணத்தின் பத்தாம் நாள் நடைபவனி இன்று ஞாயிற்றுக்கிழமை மதவாச்சியில் ஆரம்பமாகி மிகிந்தலையை அடைந்தது. இதன்போது சர்வ மத தலைவர்களும் அவர்களை வரவேற்று ஆசி வழங்கினர். 04▶

# நாமல் குமாரவைத் தாக்கி விட்டு பணம், தொலைபேசி கொள்ளை



ஊழல் எதிர்ப்பு முன்னணியின் தலைவர் நாமல் குமாரவைத் தாக்கி அவரிடமிருந்து அறுபதாயிரம் ரூபா மற்றும் கையடக்கத் தொலைபேசியைக் கொள்ளையிட்ட குற்றச்சாட்டில் தந்தை மற்றும் மகன் இருவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர் என வறக்காபொல பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட தந்தை வர்த்தகராவார். அவரது மகன் 23 வயதான இளைஞராவார். 04▶

# காலி சிறைக் கண்காணிப்பாளர் பஸ்ஸில் வைத்துத் தாக்கப்பட்டார்

### சூட்டு முயற்சியில் இருந்து அருந்தப்பு


காலி சிறைச்சாலையில் கடமையாற்றும் சிறைச்சாலை கண்காணிப்பாளர் ஒருவர் பயணித்த பஸ்ஸில் ஏறி, அவர் மீது தாக்குதல் நடத்தி, துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள முயற்சித்த குழுவைச் சேர்ந்த ஒருவரைப் பயணிகள் மடக்கிப் பிடித்துத் தம்மிடம் ஒப்படைத்துள்ளனர் என 04▶



# கொழும்பை புதிய தோற்றத்துக்கு மாற்ற சிங்கப்பூர் நிறுவனத்துடன் இலங்கை பேச்சு



## ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தகவல்



கொழும்பு, ஓக.06

கொழும்பை மாற்றியமைத்து புதிய தோற்றத்தை ஏற்படுத்த சிங்கப்பூர் நிறுவனத்துடன் இலங்கை பேச்சு நடத்தி வருகிறது என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், சிங்கப்பூர் நிறுவனமான சுர்பானா ஜுரோங் வழங்கிய திட்டங்களுடன், கொழும்பை அழகிய நகரமாக மாற்றும் தொலைநோக்குப் பார்வை ஏற்கனவே இருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் கூறியுள்ளார்.

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின்போதே ஜனாதிபதி இதனை குறிப்பிட்டுள்ளார். இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

சுர்பானா ஜுரோங் குழுமம் ஒரு உலகளாவிய நகர்ப்புற, உள்கட்டமைப்பு மற்றும் நிர்வகிக்கப்பட்ட சேவைகள் ஆலோசனை நிறுவனமாகும், இது வெற்றிகரமான திட்ட செயற்பாட்டில் 70 ஆண்டுகளுக்கும் மேலாகச் சாதனை படைத்துள்ளது.

சிங்கப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு, சுர்பனா ஜுரோங் மற்றும் அதன் துணை நிறுவனங்கள் 120 இற்கும் மேற்பட்ட அலுவலகங்களில் 16,000 உலகளாவிய திறமையாளர் குழுவைக் கொண்டுள்ளன.

40 இற்கும் மேற்பட்ட நாடுகளின் சிறந்த எதிர்காலத்தை வடிவமைக்க உதவும் முற்போக்கான சிந்தனை மற்றும் ஆக்க பூர்வமான யோசனைகளால் இயக்கப்படும் கட்டடக் கலைஞர்கள், வடிவமைப்பாளர்கள், திட்டமிடுபவர்கள், பொறியாளர்கள் மற்றும் பிற நிபுணர்கள் இதில் அடங்குவர்.

இந்த நிலையில், கொழும்பைத் தவிர, வெருகல் ஆறு முதல் மட்டக்களப்பு மற்றும் அறுகம் வளைகுடா பகுதிகள் வரையிலான சுற்றுலா வலயத்தை உருவாக்குவதில் சுர்பனா ஜுரோங் தீவிரமாக ஈடுபட்டு, சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்குப் பங்களிக்கும்.

இதேவேளை, சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை 2.5 மில்லியனில் இருந்து 5 மில்லியனாகவும், 7.5 மில்லியனாகவும் அதிகரிக்கும் இலக்குடன், சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதில் அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது.– என்றார்.

# காணி அமைச்சருக்கு அறுவைச் சிகிச்சை



சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் அவசர சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

காலில் ஏற்பட்ட காயம் காரணமாக இந்த அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்று வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# நிலவும் வறட்சியான காலநிலையால் குழந்தைகளிடையே பல்வேறு நோய்கள்

## அவதானமாக இருக்குமாறு எச்சரிப்பு

நாட்டின் தற்போது நிலவி வரும் வறட்சியான காலநிலை காரணமாக சிறுவர் மற்றும் குழந்தைகளிடையே பல்வேறு நோய்கள் பரவி வருகின்றது என்று வைத்தியர்கள் எச்சரித்துள்ளனர்.



இது தொடர்பில் கொழும்பு – லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளதாவது–

நீர்ச்சத்து குறைபாடு காரணமாக சிறுவர் மற்றும் குழந்தைகளிடையே பல்வேறு நோய்கள் ஏற்படுவது இன்றைய நாள்களில் சர்வ சாதாரணமாகக் காணப்படுகிறது.

எனவே, குழந்தைகளுக்கு அதிகளவு திரவ உணவுகள் மற்றும் பானங்களை குடிப்பதற்கு கொடுக்க வேண்டும்.

வறண்ட காலநிலையுடன் வயிற்றுப்போக்கு போன்ற நோய்களும் சிறுவர்களிடையே பரவக்கூடும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் வைத்தியசாலையை நாடுதல் வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# கொள்ளையிட்ட நகையை விழுங்கிய நபரால் பரபரப்பு!

கொழும்பு, ஓக.06

கம்பஹா, ஒருதொட்ட வீதியில் பயணித்த பெண்ணிடமிருந்து தங்க நகையைக்கொள்ளையிட்டவர், அதனைவிழுங்கியமையால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

சந்தேக நபரிடம் விசாரணை மேற்கொண்ட போது அதனை அவர் விழுங்கியுள்ளமை தெரிய வந்துள்ளது என்று யக்கல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சந்தேக நபர் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பெண்களின் தங்க நகையை பறித்துள்ளார்.

இதன் போது அருகில் இருந்தவர்கள் அந்த நபரைச் சுற்றி வளைத்துள்ளனர். இதனையடுத்து மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்தவர் தப்பிச் சென்றுள்ளார். இந்த நிலையில், நகையை வைத்திருந்த நபர் அதனை விழுங்கியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யக்கல பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் அதுல கமகேவின் பணிப்புரையின் பேரில் பொலிஸ் பரிசோதகர் சரத் பண்டார உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினர் அந்த நகையை வெளியில் எடுப்பதற்காக சந்தேக நபரை கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# வறட்சியான காலநிலை: 90 ஆயிரம் பேர் பாதிப்பு!

கொழும்பு, ஓக.06

நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக 04 மாகாணங்களில் சுமார் 90 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ, கிழக்கு, வடமேற்கு மற்றும் வடக்கு மாகாணங்களின் 5 மாவட்டங்களைச் சேர்ந்த 18 பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் மக்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

27 ஆயிரத்து 885 குடும்பங்களைச் சேர்ந்த 89 ஆயிரத்து 485 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். யாழ். மாவட்டமே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளில் 21 ஆயிரத்து 714 குடும்பங்களைச் சேர்ந்த 69 ஆயிரத்து 113 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சப்ரகமுவ மாகாணத்தில் ஆயிரத்து 98 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 734 பேரும், வடமேல் மாகாணத்தில் ஆயிரத்து 726 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 655 பேரும், கிழக்கு மாகாணத்தில் 2 ஆயிரத்து 747 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 983 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த



முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை சமனல நீர்த்தேக்கத்-துக்கு அருகில் நேற்று (05) விவசாயிகள் குழுவொன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

உடவலவ நீர்த்தேக்கத்துக்கு சமனல குளத்தில் இருந்து போதியளவு நீர் கொள்ளளவை திறந்து விடுமாறு கோரிக்கை விடுத்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தண்ணீர் திறக்கும் வரை அந்த இடத்தை விட்டு வெளியேற மாட்டோம் என அவர்கள் கூறியுள்ளனர்.

அதன்படி இன்று சமனல நீர்த்தேக்கத்தை சுற்றிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலவும் வரட்சியான காலநிலை காரணமாக உடவளவ நீர்த்தேக்கத்தில் நீர் வற்றி வருவதால் அந்தப் பகுதி விவசாயிகள் பயிர்களுக்கு தண்ணீர் இன்றி தவித்து வருகின்றனர்.

வளவ மகாவலி பிரதேசத்தில் உள்ள 12 ஆயிரம் ஹெக்டேயருக்கும் அதிகமான நெல் வயல்களுக்கு உடவலவ நீர்த்தேக்கத்தின் மூலம் நீர் விநியோகிக்கப்படுகிறது. இந்த நீர்த்தேக்கத்தில் நீரின் அளவு தற்போது 1.4 வீதமாகக் குறைந்து காணப்படுகின்றது. இதனால் சுமார் 86 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறானதொரு பின்னணியில், சமனல நீர்த்தேக்கத்தில் இருந்து உடவலவ நீர்த்தேக்கத்துக்குப் போதியளவு நீரை திறந்துவிடுமாறு கோரி விவசாயிகள் ஆரம்பித்துள்ள போராட்டம் இன்று 13 ஆவது நாளாகவும் தொடர்கிறது.

இதேவேளை, சமனல குளத்திலிருந்து 20 நாள்களுக்கு மின்சார தடையின்றி நீர் விநியோகம் செய்ய முடியும் என்று நீர்ப்பாசன அமைச்சர் ரொஷான் ரணசிங்க பொலன்னறுவையில் வைத்துத் தெரிவித்துள்ளார்.

விவசாயிகளுக்கு நீர் வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ள தாம், பதவியை இராஜினாமா செய்யவும் தயார் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# வங்கிகளில் போலி நகைகளை அடகு வைத்தவர் மாட்டினார்!

கொழும்பு, ஓக.06

பழைய தங்க நகைகளுடன் போலி நகைகளை அடகு வைத்த சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

இலங்கை வங்கியின் புத்தளம் கிளையில் நேற்று முன்தினம் (04.08.2023) இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது வங்கியின் முகாமையாளர் ஆபரணங்களை பரீட்சித்துப் பார்த்தபோது போலி ஆபரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டுக்கு அமையப் பிரதான சந்தேக நபர் உட்பட நான்கு பேர் குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவினரால் நேற்று (05.08.2023) கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் இருந்து விசாரணைகளை மேற்கொண்டபோது தங்க ஆபரணங்கள் செய்யும் இயந்திரத்தின் மூலம் உலோகப்பொருள் ஒன்றைப் பயன்படுத்தி இந்தப் போலி ஆபரணங்களைத் தயாரித்துள்ளமை தெரியவந்துள்ளது என்று பொலிஸார் கூறியுள்ளனர்.

இதன்போது சந்தேக நபர்களின் வீட்டைச் சோதனைக்கு உட்படுத்திய போது போலி ஆபரணங்கள் தயாரிக்கும்



இயந்திரம், ஆபரணங்களை உருக்குவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மற்றும் போலி ஆபரணங்கள் தயாரிக்கும் அளவு அச்சுக்கள் என்பன சிக்கியுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுபோன்று ஏழு வங்கிகளில் இவ்வாறு போலி நகைகளை அடகு வைத்துள்ளனர் என்று சந்தேக நபர்கள் விசாரணைகளின் போது தெரிவித்துள்ளனர் என்று குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், புத்தளம் மற்றும் பாலாவி இலங்கை வங்கி கிளைகளில் இருந்தும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் மீதமுள்ள வங்கிகளில் இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கப்பட உள்ளனர் எனவும் குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவினர் தெரிவித்தனர்.

குறித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பிரதான சந்தேகநபர் சிராம்பையடி பகுதியைச் சேர்ந்தவர் எனவும் ஏனையவர்கள் மணல்குன்று, சின்ன நாகவில்லு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்களிடம் தொடர்ந்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## 13ஆம் திருத்தம்...

அதற்கு முன்னர் அரசாங்கத்தின் திட்டம் என்னவென்பதை அது வெளிப்படுத்த வேண்டும் என சஜித் பிரேமதாஸா தலைமையிலான பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கூறியுள்ளது.

13ஆவது திருத்தச் சட்டம் சம்பந்தமாக எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னதாக அரசியல் கட்சிகள் தமது பரிந்துரைகளையும் முன்மொழிவுகளையும் முன்வைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் கட்சிகளுக்கு அறிவித்துள்ளார்.

அந்த அறிவிப்புக்குப் பதிலளிக்கும் போதே ஐக்கிய மக்கள் சக்தி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அக்கட்சியினுடைய பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார கூறியவை வருமாறு:-

13ஆவது திருத்தச் சட்டம் சம்பந்தமாக அரசாங்கம் அரசியல் கட்சிகளுடைய யோசனையை கோரியுள்ளது. அதற்கு முன்னதாக இந்த விடயத்தில் அரசாங்கம் எவ்விதமான இறுதியான நிலைப்பாட்டை கொண்டிருக்கிறது என்பதை வெளிப்படுத்த வேண்டும். ஜனாதிபதி அரசியல் கட்சிகளின் யோசனையை கோருவதற்கு முன்னதாக அவர் தலைமையிலான அரசாங்கம் எவ்விதமான இறுதி முடிவை எடுத்துள்ளது என்பதை முதலில் எமக்கு அளிக்க வேண்டும்.

அதனடிப்படையிலேயே நாம் எமது யோசனைகளை முன்வைக்க முடியும். 13ஆவது திருத்தச்சட்ட விடத்தில் மட்டும் அரசாங்கம் எதிர்க்கட்சிகளின் யோசனைகளை பெறுவதற்கு முன்னைவது வழமைக்கு மாறானதொரு விடயமாகும்.

ஆகவே, இந்த விடயத்தில் அரசாங்கம் தனது யோசனைகளை முன்வைக்கின்ற பட்சத்தில் அது தொடர்பில் நாம் எமது நிலைப்பாடுகளையும் முன்மொழிவுகளையும் வெளிப்படுத்துவதற்கு தயாராக இருக்கிறோம். - என்றார்.

## நாமல் குமாரவை...

நாமல் குமாரவின் மனைவி பொலிஸில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சந்தேகத்தின் பேரில் இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## காலி சிறை...

வெலிகம தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுக்கு உள்ளான கண்காணிப்பாளர் மாத்தறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சிறைச்சாலை கண்காணிப்பாளர் தனது கடமைகளை முடித்துக்கொண்டு வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தபோது சுமார் 6 பேர் கொண்ட குழுவொன்று பஸ்ஸில் ஏறி அவரைத் தாக்கியுள்ளனர்.

இதற்கு பயணிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தமையால், அந்தக் குழுவினர் அவர்மீது துப்பாக்கிச்சூடு நடத்த முயற்சித்த நிலையில் பஸ்ஸிலிருந்து தப்பியோடியுள்ளனர். இவர்களில் ஒருவரே பயணிகளால் பிடிக்கப்பட்டு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## சுயலாப...

தேசிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண சர்வகட்சி மாநாடு சிறந்த களம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அனைத்து கட்சிகளும் தனக்கு ஆதரவு வழங்கினால் மக்கள் எதிர்நோக்கும் சகல பிரச்சினைகளுக்கும் இந்த ஜனாதிபதி பதவிக் காலத்தில் தாம் தீர்வு காண்பார் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

## மிஹிந்தலையில்...

அத்தோடு, ரம்பேவ பிரதேச செயலக வளாகத்திலும் மலையக மக்கள் வரவேற்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ரம்பேவ பகுதியைச் சேர்ந்த மக்கள் பேரணியினரை எதிர்கொண்டு உபசரித்ததை தொடர்ந்து, அங்கே பாடசாலை மாணவர்களுக்கு நடைபயணம் பற்றி பேரணியினர் தெளிவுபடுத்தினர்.

இதனையடுத்து, பிற்பகல் 3 மணியளவில் ரஜரட்ட பல்கலைக்கழகத்தை இப்பேரணி அடையவிருந்தது.

பேரணியில் சென்றோர் நேற்றைய தினம் மதவாச்சியில் ஓய்வெடுத்தமையயடுத்தே இன்று பயணத்தை மதவாச்சியில் மீண்டும் ஆரம்பித்தனர்.

மலையகம் 200 நிகழ்வை முன்னிட்டு தலைமன்னார் முதல் மாத்தளை வரையான நடைபவனி நிகழ்வு கடந்த ஜூலை 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை தலைமன்னார், புனித லோரன்ஸ் தேவாலயத்தில் ஆரம்பமானது.

இப்பேரணியினர் எதிர்வரும்ஓகஸ்ட் 12ஆம் திகதி மாத்தளையை அடைவதோடு மாண்புமிகு மலையக மக்கள் அமைப்பின் கூட்டிணைவிலான 16 நாள் நடைபயணத்தை நிறைவு செய்து கொள்வர்.

## நாணய நிதிய...

39 சதவீதம் மாத்திரமே எட்டப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ஜூன் மாதத்தில் 55 சதவீதம் என்ற இலக்கில் சுமார் 33 சதவீதம் நிறைவடைந்துள்ளது.

இந்த 33 சதவீதத்திற்குள் மோசடி மற்றும் ஊழல் குறைப்புச் சட்டம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் சுதந்திரச் சட்டம் ஆகியவற்றின் நடைமுறை உள்ளடக்கியுள்ள போதிலும், அவை ஜூன் மாதத்திலும் மேற்கொள்ளப்படவில்லை.

செப்டெம்பர் மாதத்திற்குள் நிறைவேற்றப்பட வேண்டிய 77 சதவீத தொகையைப் பூர்த்தி செய்வது தற்போது கடும் சவாலாக மாறியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒவ்வொரு அரச நிறுவனத்திலிருந்தும் வருடாந்த அறிக்கைகள் முறையாகப் பெறப்பட வேண்டும். ஆனால் 52 நிறுவனங்கள் 2022 ஆம் ஆண்டிற்கான அறிக்கைகளை இதுவரை சமர்ப்பிக்கவில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளுக்கமைய, சர்வதேச நாணய நிதியுடனான ஒப்பந்தத்தை சந்திப்பதற்கான முன்னேற்றத்தை அளவிடுவதற்கு ஒரு தனி நிறுவனம் அமைக்கப்பட வேண்டும். ஆனால் அது கூட இன்னும் நிறுவப்படவில்லை.

நெருக்கடி ஏற்பட்ட பின்னர் இலங்கைக்கு முதல் தவணை பணம் கிடைக்க 400 நாள்கள் சென்றன. ஆனால் பங்களாதேஷ் போன்ற நாடுகள் ஒரு மாதத்தில் முதல் தவணையைப் பெற முடிந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

# ஐ.தே.க. பொத்துவில் அமைப்பாளருடன் சந்திப்பு





(றிபாஸ்)

சம்மாந்துறை முன்மாதிரி இளைஞர் அமைப்பினர் ஐக்கிய தேசியக் கட்சியின் பொத்துவில் தேர்தல் தொகுதி பிரதம அமைப்பாளரும், தொழிலதிபருமான யூ.கே.ஆதம்லெவ்வை சந்தித்து பல கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இதன்போது மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

சமூக சேவையாளர், அப்துல் முனாப் தலைமையில் சம்மாந்துரையில் நேற்று (05) நடைபெற்ற இந்தச் சந்திப்பில் இளைஞர்களின் எதிர்காலம், தொழில் வாய்ப்பு, விளையாட்டுக் கழகங்களின் அபிவிருத்தி திட்டங்கள், பிரதேச அபிவிருத்தி போன்ற பல் வேறுபட்ட திட்டங்கள் அடங்கிய மகஜர் ஒன்றை அமைப்பாளரிடம் கையளித்தனர்.

# இலங்கையின் கப்பல் துறை அபிவிருத்திக்கு பிரான்ஸ் அரசின் ஆதரவை வழங்குவோம்

## ஜனாதிபதி மக்ரோன் உறுதியளிப்பு

கொழும்பு, ஓக.06

இலங்கையின் கப்பல் போக்குவரத்து துறையின் அபிவிருத்திக்குப் பிரான்ஸ் அரசின் ஆதரவை வழங்குவோம் என்று ஜனாதிபதி அதிபர் இம்மானுவேல் மக்ரோன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் உறுதியளித்துள்ளார்.

பிரான்ஸ் அதிபரின் இலங்கைக்கான விஜயத்தின் போது இடம்பெற்ற குறுகிய சந்திப்பின் போதே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அதிபரின் தலைமை அதிகாரி சாகல ரத்நாயக்க, அதிபர் மக்ரோனுக்கு அறிவித்ததையடுத்து, பிரான்ஸ் அதிபர் இந்த உடன்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார்.

கப்பல் துறையில் உலகில் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ள பிரான்ஸ், இலங்கையில் முதலிடுவதற்கு அந்த நாட்டு நிறுவனங்களுக்கு ஆதரவளிக்கும் என்று தெரிவித்துள்ளது.

இந்தச் செயற்பாடுகளை இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ஒருங்கிணைக்க வேண்டும் எனவும் பிரான்ஸ் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.



# சொக்லட்டில் மனித விரல்



கொழும்பு, ஓக.06

மஹியங்கனை வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலையில் கொள்வனவு செய்த சொக்லட் ஒன்றில் மனித விரலின் ஒரு பகுதி காணப்பட்டுள்ளது என்று மஹியங்கனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

நேற்று பிற்பகல் உணவகத்தில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட சொக்லட் ஒன்றில் மனித விரலின் ஒரு பகுதி காணப்பட்டுள்ளது. இது தொடர்பில் வைத்திய சாலையில் பணி புரியும் உத்தியோகத்தர் ஒருவர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

விசாரணையின் போது அது நகத்துடன் கூடிய மனித விரலின் ஒரு துண்டு என உறுதிப்படுத்தப்பட்டது என்று பொது சுகாதார பரிசோதகர் சர்மிந்த ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, குறித்த விரலின் உரிய பகுதியையும், அதில் இருந்ததாக கூறப்படும் சொக்லட் பொதியையும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் பொறுப்பேற்றுள்ளது.

மஹியங்கனை சுகாதார வைத்திய அதிகாரி சஹான் சமரவீரவின் ஆலோசனையின் பேரில், பொது சுகாதார பரிசோதகர் சர்மிந்த ரத்நாயக்க மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் குழு இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# குற்றச் செயல்களைத் தடுக்க பொலிஸ் விஷேட குழு நியமனம்




கொழும்பு, ஓக.06

போதைப்பொருள் மற்றும் பாதாள உலக செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கு அமைய பொலிஸ் அதிகாரிகள் அடங்கிய விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸின் உத்தரவுக்கமைய பொலிஸ் மா அதிபர் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார்.

இதனடிப்படையில், போதைப் பொருள் மற்றும் பாதாள உலக செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்படக் கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் பொலிஸ் தலைமையகம் மற்றும் அமைச்சுக்கு அறிக்கை சமர்பிப்பதற்காக மேல் மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னகோன் மற்றும் பின்வரும் அதிகாரிகள் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் – மேல் மாகாணம் – தென்னகோன், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் – வட மாகாணம் – கே.பி.எம்.குணரத்ன், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் – தென் மாகாணம் – எஸ்.சி. மெதவத்த், கட்டளை அதிகாரி – விசேட அதிரடிப்படை ஜெயசுந்தர், பிரதிப் பொலிஸ் மா அதிபர் – குற்றப் புலனாய்வுத் திணைக்களம் – எஸ்.பி. ரணசிங்க், பிரதிப் பொலிஸ் மா அதிபர் – போதைப் பொருள் ஒழிப்புப் பணியகம் – ஒஷான் ஹேவாவிதாரண், பிரதிப் பொலிஸ் மா அதிபர் – சிறப்பு பணியகம் – டி.சி.ஏ. திரு.தனபால், பணிப்பாளர் – கொழும்பு குற்றப்பிரிவு – என். சில்வா ஆகியோரே இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## ரணிலின் சுயலாப அரசியல்

அதிகாரத்துக்கு - பதவிக்கு - வந்து விட்டால் எதுவும் பேசலாம், எதுவும் கூறலாம், எதுவும் போதிக்கலாம் என்பது பலரின் எண்ணம் போலும்.

கொழும்பு மாவட்ட மக்களினால் பொதுத் தேர்தலில் அடியோடு நிராகரிக்கப்பட்டு, பின்னர் பின் கதவால் நாடாளுமன்றத்துக்கும், அதன் மூலம் ஜனாதிபதிப் பதவிக்கும் உயர்ந்துவிட்ட ரணில் விக்கிரமசிங்க, இப்போது கூறும் அரசியல் உபதேசங்கள் இப்படிப் பட்ட எண்ணத்தைத்தான் தருகின்றன.

சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பாக கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு செவ்வியளித்த அவர், அனைத்துக் கட்சிகளும் தமக்கு ஆதரவு வழங்கினால் மக்கள் எதிர்நோக்கும் சகல பிரச்சினைகளுக்கும் இந்த ஜனாதிபதிப் பதவிக்காலத்திலேயே தீர்வு காண்பேன் என்று கூறியிருக்கின்றார். அதுவல்ல விடயம். அதை யும் தாண்டி அவர் கூறியிருக்கும் ஓர் அம்சம்தான் கவ னிக்கப்பட வேண்டியது.

நாடாளுமன்றம் வந்துள்ள மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் சுயலாப அரசியலைக் கைவிட்டு, மக்கள் நலன் கருதிச் செயற்பட வேண்டும் என்று வேதம் ஓதி இருக்கின்றார் அவர் - ருத்ராட்சப் பூனை போல.

அவரது இந்தக் கருத்து 'ஊருக்கடி உபதேசம், உனக் கில்லையடி' என்ற மாதிரித்தான் அமைந்திருக்கின்றது.

தன்னுடைய அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வெற்றி என்ற இலக்குக்காகத் தேசிய மட்டத்தில் நடக்க வேண்டிய உள்ளூராட்சி தேர்தலுக்கே முழுமையாக ஆப்பு வைத்து, மக்களாட்சியைக் கேலிக்கும் - கேள்விக்கும் - உள்ளாக்கியிருக்கும் அவர், நாடாளுமன்ற உறுப்பி-னர்களைப் பார்த்து சுயலாப அரசியல் செய்யக்கூடாது என்று தத்துவம் பேசுகின்றார்.

தமது சுயலாப அரசியலுக்காக தேசிய மட்டத் தேர் தல்களையே. - உள்ளூராட்சி சபைகளுக்கான மக்கள் பிரதிநிதித்துவத்தையே - இல்லாமல் செய்திருக்கும் ஜனாதிபதி, நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பார்த்து சுயலாப அரசியல் செய்யாதீர்கள் என்று உபதேசம் செய்கின்றார்.

தமது நல்லாட்சி அரசின் காலத்தில் போது மாகாண சபை தேர்தல்களை எதிர்கொள்ள அஞ்சிய அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மாகாணசபைத் தேர்தல் சட்டங்களைச் சீர்திருத்தப் போகின்றோம் என்ற பெயரில், இருந்த மாகாண சபை தேர்தல் சட்டங்களையே இல்லாம லாக்கினார். அதனால் கடந்த ஆறு ஆண்டுகளாக மாகாண சபைகளுக்கான தேர்தல்களும் இல்லாமல் போய்விட்டன.

தன்னுடைய அரசியல் சுயலாபங்களுக்காக உள்ளூ ராட்சி சபைகள் மற்றும் மாகாண சபைகளுக்கான தேர்-தல்களையும் அதன் மூலம் மக்கள் பிரதிநிதித்துவத்தை யும் அழித்த ரணில் விக்கிரமசிங்க, அரசியல் சுயலாப நடவடிக்கைகளில் ஈடுபடாதீர்கள் என்று உபதேசிப் பது வேடிக்கையிலும் வேடிக்கை.

மக்கள் தமது இறைமையை வெளிப்படுத்தும் தேர் தல்களில் ஒன்றாக மாகாண சபைத் தேர்தல்களை உயர்நீதி மன்றம் அடையாளம் கண்டுடிருக்கின்றது. அந்தத் தேர்தல்களுக்கு ஆப்பு வைத்ததன் மூலம் மக்களின் இறைமை வெளிப்பாட்டுக்கும் ஆப்பு வைத்திருக்கும் ரணில் விக்கிரமசிங்க , சுய லாப அரசியல் குறித்து குறை கூறுவதற்கு அல்லது உபதேசம் செய்வதற்கு அருகதையே யற்றவர்.

# நாகப்பட்டினம் - காங்கேசன்துறை கப்பல் சேவை விரைவில் ஆரம்பம்

## இந்தியத் துணைத் தூதுவர் தகவல்

நாகப்பட்டினம் – காங்கேசன்துறைக்கு இடையிலான கப்பல் போக்குவரத்து விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூது வர் ராகேஸ் நடராஜ் தெரிவித்துள்ளார்.

இதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே இந்தியத் துணைத் தூதுவர் ராகேஸ் நடராஜ் இதனைத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக காங்கேசன்துறை – காரைக்கால் இடையே கப்பல் சேவையை ஆரம்பிக்கத் திட்டமிட்டிருந்தது.

எனினும் தற்போது காங்கேசன்துறை – நாகப்பட்டினம் என்ற அடிப்படையில் பயணப் பாதை மாற்றி அமைக் கப்பட்டுள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

இதற்காக நாகப்பட்டினம் துறைமுகத்தில் பயணிகள் முனையம், சுங்க அலுவலகம் போன்றவை அமைக் கும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டின் நாகப்பட்டினத்தில் இருந்து இலங்கை வடக்கு மாகாணத்துக்கான தூரம் 110 கிலோமீற்றராகும்.

எனவே நாகப்பட்டினத்தில் இருந்து கப்பலில் சென்றால் வெறும் 4 மணிநேரத்தில் காங்கேசன்துறையை அடைந்து விடலாம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முட்டை இறக்குமதி நிறுத்தம் பேக்கரி தொழிலில் பாதிப்பு

## அகில இலங்கை பேக்கரி சங்கம் அறிவிப்பு

பேக்கரி தொழிலுக்காக இந்தியாவில் இருந்து இறக்கு மதி செய்யப்படும் முட்டைகள் இடைநிறுத்தப்பட்டுள்ள தால் தொழில் மீண்டும் பாதிக்கப்பட்டுள்ளது என்று என அகில இலங்கை பேக்கரி சங்கம் அறிவித்துள்ளது.

கடந்த காலங்களில் இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள் விநியோகம் செய்யப்பட்டதன் காரணமாகவே உற்பத் திப் பொருள்களின் விலை குறைக்கப்பட்டது என்று சங் கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள் ளார்.

பேக்கரி உற்பத்திக்கு உள்ளூர் முட்டைகளை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள் ளது.

இதனால் இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளை தமது தொழிலுக்கு விடுவிப்பது தொடர்பில் அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும்.

உள்நாட்டு சந்தையில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வு ஆகியவற்றை கருத்தில் கொண்டு இந் தியாவில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்ய இந்த ஆண்டு தொடக்கத்தில் அமைச்சரவை ஒப்புதல் அளித்திருந்தது.

எனினும் இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளை ஹோட்டல் மற்றும் பேக்கரிகளுக்கு விற்பனை செய்யும் திட்டம் நிறுத்தப்படும் என்று அரச வர்த்தகக் கூட்டுத்தா பனம் அறிவித்துள்ளது.

இந்நிலையிலேயே, இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதால், மீண்டும் பேக்கரி தொழில் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# கூடைக்குள் ஒரு தேசத்தை சுமக்கும் மலையக மக்கள் !

**- ஐங்கரன் விக்கினேஸ்வரா**

**( மலையகம் 200 ஆண்டுகளின் சிறப்பு நிகழ்வாக வடக்கு - கிழக்கில் எழுச்சியாக நடைபெறும் நிகழ்வை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது )**

அந்நியரின் சுரண்டலுக்காய் தமது இரத்தத்தையே உரமாக்கி, இலங்கையின் பொருளாதாரத்தை வளப்படுத்திய பல லட்சம் மலையக மக்களது வலிசுமந்த மக்களின் வரலாறு குருதியால் எழுதப்பட்டுள்ளது.

மலைகளில் உரமாகி,தேயிலையில் இரத்தமாகி, கூடைக்குள் ஒரு தேசத்தை சுமந்த மலையக மக்களே, இலங்கையை எழில்கொஞ்சும் பூமியாக மாற்றினர்.

### கூடைக்குள் தேசத்தைச் சுமந்த மக்கள்

மலைகளில் உரமாகி, தேயிலையில் இரத்தமாகி, கூடைக்குள் ஒரு தேசத்தை சுமந்த மலையக மக்கள் 1948 நவம்பர் 15 நாடற்றவர் ஆக்கப்பட்டனர். அன்று மொத்தச் சனத்தொகையில் 11.7வீதமாக இருந்த இலங்கை சனத்தொகை அளவில் இரண்டாம் நிலையில் இருந்த மலையக தமிழர்கள் இன்று எண்ணிக்கையில் நான்காம் நிலைக்குத் தள்ளப்பட்டதற்கும், இன்றைய நாள் வரை மூன்றாம் தர பிரஜைகளாக நடாத்தப்படும் கொடுமை தொடர்கிறது.

இலங்கை பிரித்தானியரிடம் இருந்து சுதந்திரமடைந்து வெறும் 285 நாள்களுக்குள் யாரெல்லாம் இலங்கை நாட்டவர்கள் என்பதை தீர்மானிப்பதற்காக கொண்டுவரப்பட்ட சட்டம் யாரெல்லாம் இலங்கை பிரஜை கள் அல்ல என்பதை தீர்மானிப்பதற்கான சட்டமாக மாறி இந்த நாட்டின் இரண்டாவது அதிகளவான சனத்தொகையைக் கொண்டிருந்த சமூகத்தை இலங்கையில் நாடற்றவர்களாக்கிய கரும்புள்ளி வரலாற்றுடனேயே இலங்கை பாராளுமன்றம் தனது வரலாற்றைத் தொடங்குகின்றது.

கடல் கடந்து கவலை தீர வந்த மக்கள்

1820 – 1840 காலப் பகுதியில் இந்தியாவின் தென்மாநிலத்தில் அங்கு வாழ்ந்த அப்பாவி மக்களைக் கூலித் தொழிலாளர்களாக இலங்கைக்கு அழைத்துவந்தனர்.

1815ஆம் ஆண்டு கண்டி இராஜ்ஜியத்தை பிரித்தானியர் கைப்பற்றிய பின்னர் மலையகமெங்கும் வெள்ளையர்களின் ஆதிக்கத்தில் குறைந்த கூலிக்காய் கொண்டு வரப்பட்ட பிரிட்டிஷாரின் கைங்கரியத்தை உணராத இம்மக்கள் தமது மனித வளத்தை தியாகம் செய்து மலைகளைச் செய்து தேயிலைப் படர்ந்த சோலையாக்கினர்.

1823 இல் அறிமுகப் படுத்தப்பட்ட காப்பி பயிரிடலுக்கு காரண கர்த்தாக்களாகி அந்நியனுக்குப் பெருலாப மீட்டிக் கொடுத்தனர். பிரிட்டிஷாரது ஆட்சியில் தென்னிந்தியாவிலிருந்து வறுமையைப் போக்க குடிபெயர்ந்த இம் மக்களின் வரலாறு வேதனை நிறைந்தது.

கடல் கடந்தால் கவலை தீரும் என்ற நம்பிக்கையுடன் இலங்கைத் தீவில் காலடி வைத்தவர்களுக்குக் காத்திருந்தது காடுகளும் கரடு முரடு நிறைந்த மலைகளுமே !

### வலிசுமந்த பயணம்

இந்தியாவில் இருந்து வரும்வழியிலும், வந்துகுடியேறிய பின்னரும் இம்மக்கள் அதிகமான இன்னல்களை எதிர்கொண்டனர். ஆதிலெட்சுமி என்ற கப்பல் கடலில் மூழ்கியதால் 120 பேர் செத்துமடிந்தனர் என்ற வரலாறும் இருக்கின்றது.

இவ்வாறு வலிசுமந்த பயணம் மேற்கொண்டவர்கள் மலைப்பாங்கான பிரதேசங்களில் குடியமர்த்தப்பட்டதால் – மலையகத் தமிழர் என்றும், இந்திய வம்சாவளித் தமிழர் என்றும் அடையாளப்படுத்தப்பட்டனர்.

1880 இல் காப்பியின் வீழ்ச்சியைத் தொடர்ந்து பெரும் லாபம் மீட்டும் தேயிலைப் பயிரிடல் பிரிட்டிஷரால் ஆரம்பிக்கப் பட்டபோது மலையகத் தொழிலாளர்களது உழைப்பே தேயிலைச் செடிகளுக்கு உரமானது.

ஆனால் இவற்றின் மத்தியிலே இவர்கள் பட்டத் துன்பங்கள் என்றுமே முடிவுக்கு வரவில்லை. இந்தியாவிலே நிலச்சுவான்தாரர்களாலும், நாட்டாண்மையாலும் சுரண்டப்பட்டு, அடக்கப்பட்ட இம்மக்களை இலங்கையிலும் வெள்ளையனாலும், கங்காணிகளாலும் சொல்லாணா துன்பத்துக்கு முகங்கொடுத்தனர்.

**(08ஆம் பக்கம் பார்க்க)**

# கூடைக்குள் ஒரு தேசத்தை சுமக்கும் மலையக மக்கள் !



(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

### எழில்கொஞ்சும் பூமியாக

காடுமேடாகவும், கல்லுமுல்லாகவும் காட்சியளித்த மலைநாட்டை - தமது கடின உழைப்பால் எழில்கொஞ்சும் பூமியாக மாற்றியதுடன், இலங்கையின் பொருளாதாரத்தையும் தோளில் சுமந்தனர். ஆனாலும், அவர்கள் வசிப்பதற்கு அடிப்படை வசதிகள்கூட இல்லாத நிலையில் ஆரம்பத்தில் வழங்கப்பட்ட லயன் அறைகளிலேயே பல தசாப்தங்களை கடந்தனர்.

இன்றைய 21 ஆம் நூற்றாண்டிலும் இந்த நிலைமை முழுமையாக இன்னமும் மாறவில்லை என்பது கசப்பான உண்மையாகும்.

1931ஆம் ஆண்டு டொனமூர் சீர்திருத்தம் மூலம் வாக்குரிமை பெற்ற போதும் அது 1947 - 1948 களில் கொண்டுவரப்பட்ட இந்திய - பாகிஸ்தானிய ஒப்பந்தம், சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம், பிரஜாவுரிமைச் சட்டங்களினால் பறிக்கப்பட்டது. இதன்பின்னர் 3 தசாதப்தங்களுக்கு மேலாக நாடற்றவர்களாகவே மலையக மக்கள் வாழ்ந்தனர்.

வாழ்க்கையின் இருப்புக்காய், தமது உழைப்பை வெறுமனே விற்ற இவர்களது வாழ்வு, இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின், கூட இருந்தவரால் குழிபறிக்கப் பட்டது என்பதே வரலாற்று உண்மையாகும்.

இலங்கைக்கு சுதந்திரம் வழங்கிவிட்டு வெள்ளையர்கள் வெளியேறிய பின்னர், சிங்களத் தேசியவாதிகள், மலையகத் தமிழர்களை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்ப வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர்.

1947ஆம் ஆண்டில் இலங்கையின் முதல் நாடாளு மன்றத் தேர்தலிலே ஏழு மலையகத் தமிழ்ப் பிரதிநிதிகளை மலையக மக்கள் தெரிவு செய்தனர். இடதுசாரிகளின் வெற்றிக்கு காரணமானவர்கள். இக் கட்டத்தில் பௌத்த வெறியைத் தூண்டி தேர்தலில் பங்கு கொண்ட டி. எஸ். சேனநாயக்கா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி மொத்த இடங்கள் 95 இல், 42ஐ மட்டுமே பெற்றதோடு மொத்த வாக்குகளில் 39.5 சதவீதம் மாத்திரமே பெற முடிந்தது.

இவர்களது நெருக்குதல்களால் 1948 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் தேதி இலங்கைக் குடியுரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதை தமிழ் நாடாளு மன்ற உறுப்பினர்கள் கடுமையாக எதிர்த்தனர்.

இந்த நேரத்தில் தான் தமது பதவி நாற்காலிகளுக்கு ஆபத்தென உணர்ந்த சிங்கள பெருந் தேசியவாதிகள் தமது கபட நாடகத்தைக் கையாண்டனர்.

இலங்கைப் பொருளாதாரத்தில் 80 சதவிகிதம் சம்பாதித்துக் கொடுப்பவர்களாகவும் கடினமான உழைப்புச் சக்தியை மிகக் குறைந்த விலையில் விற்பவர்களாகவும் உயர்ந்து நின்ற இவர்களை ஸ்தாபன மயப்பட்ட தொழிலாளர்களாகப் பொது அரசியல் வாழ்வில் பங்கெடுக்க அனுமதிப்பது தமது எதிர்கால நலன்களுக்கு சாவுமணி அடிக்கும் என்பதனை உணர்ந்து சிங்கள அரசு, உலகின் வேறெந்த நாட்டிலும் காணப்படாத இக் கொடியச் சட்டத்தை அமுல்படுத்தியது.

### பிரஜா உரிமை இழந்த மக்கள்

இதனால் லட்சக்கணக்கான மலையக தமிழ் மக்கள் பிரஜா உரிமை இழந்து தேசிய உரிமை மறுக்கப்பட்டனர்.

பதவியில் அமர்ந்த சிங்கள அரசுகள் தொடர்ந்து மாறி மாறி பல்வேறு ஒடுக்குமுறைகளில் இம்மக்களை வதைப்படுத்தியதை வரலாறு காட்டும். கட்டாயக் குடியேற்றங்களாலும், கொடூர இனக் கலவரங்களாலும் தமது பாரம்பரிய மண்ணில் இவர்கள் அகதிகளாயினர். அனாதைகளாக விரட்டப்பட்டனர்.

ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தத்தால் இந்தியாவுக்கு குடிபெயர்ந்தவர்களாக இடம் பெயர்ந்த இம்மக்களுக்கு இந்தியாவிலும் 'சிலோன்' காரன் என்ற பட்டம் கிடைத்ததே தவிர வேறெந்த நன்மையும் ஏற்படவில்லை.

ஆயினும் ஈழத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் லட்சக் கணக்கான உழைக்கும் மக்கள் தமது பாரம்பரிய மண்ணாக தாம் காலங்காலமாக வளப் படுத்தி வாழ்ந்த அந்த மண்ணையே நேசிக்கின்றனர். ஆட்சியாளர்களின் ஒடுக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டு சிங்கள அராஜக ஆட்சி நடந்த வேலையில் கூட மண்ணை மீட்க போராடியது வரலாற்றின் வெற்றிப் போக்கே எனலாம்.

### பெரும் போராட்டங்களை நடாத்திய மக்கள்

மலையக மக்கள் குடியுரிமை, வாக்குரிமை உள்ளிட்ட அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்கு பெரும் போராட்டங்கள் நடாத்தினர்.

1952ஆம் ஆண்டு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், 7 நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நடத்திய மூன்று மாத சத்தியாக்கிரக போராட்டம் அன்றிருந்த அரசின் கவனத்தை ஈர்த்தது.

1958ஆம்குடியுரிமைசட்டத்தின்பிரகாரம், பிரஜாவுரிமை பெற்றவர்களைத் தவிர ஏனைய நாடற்றவர்களாக கருதப்பட்ட மலையக மக்களுக்கு குடியுரிமை வழங்கும் விசேட சட்டம் 1988 நவம்பர் 9 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட சட்ட மூலமாகவே வழங்கப்பட்டது.

இதனால் நாற்பது வருடங்களாக அரசியல் இழுபறிகளால் தீர்வு காணாத பெரும் பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்தது. மலையக சமுதாயத்தினர் 'நாடற்றவர்' என்ற பதத்தில் இருந்து விடுபட்டனர்.

### முன்னேறும் மலையக மக்கள்

கல்வியிலும் மலையக மக்கள் முன்னேறி வருகின்றனர். அண்மைய ஆண்டு புள்ளிவிபரங்களின்படி பல்கலைக்கழக பிரவேசமும் வரவேற்கும் வகையில் அமைந்துள்ளன.

பெரும் போராட்டத்துக்கு மத்தியில் மாறிவரும் மலையக சமூகம் இன்று அனைத்துத் துறைகளிலும் தலை தூக்க ஆரம்பித்துள்ளது. சட்டத்தரணிகள் முதல் தலைநகரில் பெரும் வர்த்தகர்கள் வரை மலையகத் தமிழ்ச் சமூகத்தில் இருந்து இணைந்து வருகின்றனர்.

அத்துடன் மலையகத்தில் மருத்துவமனைகளை அமைக்க இந்திய அரசு நிதியுதவிகளைச் செய்துள்ளதுடன், மலையக மாணவர்களுக்கான புலமைப் பரீசில் உதவிகையையும் வழங்கிவருகின்றது.

இந்திய அரசும் மலையக மக்களின் நிலையைக் கருத்திக் கொண்டு, வீட்டுத் திட்டமொன்றின் ஊடாக நேசக்கரம் நீட்டி உதவி வருகிறது.

மலையக மக்களின் சுகாதாரத்துறை, கல்வித்துறை என்பவற்றை மேம்படுத்துவதிலும் அந்த நாட்டு அரசு அக்கறைக் கொண்டு உதவி வருவதையும் நாம் காணலாம்.

### விழித்து எழுந்த மலையகம்

1940ஆம் ஆண்டு பிரிட்டிஷாரின் ஆட்சியை எதிர்த்து உயிர் துறந்த கோவிந்தன் போன்றோரும், 1976ல் தாம் வாழும் மண்ணை பறித்தெடுக்க யாருக்கும் உரிமையில்லை என்ற கோஷத்துடன் போராடி மரணித்த சிவனு-லட்சுமணன் போன்ற ஆயிரக் கணக்கானோர் வாழ்ந்து போராடிய மலையகம் விழித்து எழுந்ததால் இன்று தலை நிமிர்ந்து நிற்கின்றது.

# புதிய வகை கற்பித்தல் வெண்பலகை அறிமுகமும் பாடசாலை குறுஞ்செய்திச் சேவை அங்குரார்ப்பணமும்

( நூருல் /ஹுதா உமர் )

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கமு/கமு/ அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் (ஜீ.எம்.எம்.எஸ்) பெற்றோர்களின் உதவியுடன் அமைக்கப்பட்ட இலகு கற்பித்தல் வெண்பலகை அறிமுகமும், பாடசாலை குறுஞ்செய்திச் சேவை அங்குரார்ப்பணமும், ஆசிரியர் கையேடு அறிமுகமும் பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். இல்யாஸ் தலைமையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் கல்முனை வலயக் கல்விப்பணிப்பாளர் எம்.எஸ்.எஸ். நஜீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இலகு கற்பித்தல் வெண்பலகையை அறிமுகம் செய்து வைத்தார்.



அத்துடன் பாடசாலை குறுஞ்செய்திச் சேவை, ஆசிரியர் கையேடு என்பவற்றையும் அறிமுகம் செய்து வைத்தார்.

இந்த நிகழ்வில் சாய்ந்தமருது கோட்டக்கல்வி அதிகாரியும், கல்முனை வலய உதவிக் கல்விப் பணிப்பாளருமான என்.எம்.ஏ. மலீக், பாடசாலையின் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு செயலாளர் எந்திரி எம்.ஐ.எம். றியாஸ், தொழிலதிபர் எம்.ஜே.எம். காலீத் உட்பட பிரதியதிபர், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# புதிய அதிபர் பதவியேற்பு



(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கமு/கமு/ ரியாழுல் ஜன்னா வித்தியாலய புதிய அதிபராக கல்முனை கல்வி வலய கல்முனை கமு/கமு/அல்–பஹ்ரியா மகா வித்தியாலய பதில் அதிபராகவும் மற்றும் பிரதியதிபராகவும் கடமையாற்றிய இலங்கை அதிபர் சேவை தரத்தை உடைய எம்.ஏ. அஸ்தர் கடமைகளை பொறுப்பேற்று கொண்டார்.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ. ஜீ. திஸாநாயக்க மற்றும் கல்முனை வலயக் கல்விப்பணிப்பாளர் எம்.எஸ்.எஸ். நஜீம் ஆகியோரின் கடிதத்தின் பிரகாரம் சாய்ந்தமருது கோட்டக்கல்வி அதிகாரியும், கல்முனை வலய உதவிக் கல்விப் பணிப்பாளருமான என்.எம்.ஏ. மலீக் பாடசாலையின் தற்காலிய அதிபராக கடமையாற்றிய அதிபர் எஸ். அல் சப்ரி இடமிருந்து புதிய அதிபருக்கான பொறுப்புகளை பெற்றுக் கையளித்தார்.

# அதிகரிக்கும் தற்கொலைகள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 6 மாத காலப்பகுதில் 18 வயதுக்கு உட்பட்ட 4 சிறுவர்கள் உட்பட 79 பேர் தற்கொலை செய்துள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஜூலை மாதம் மட்டும் 8 பேர் தற்கொலை செய்துள்ளனர்.

வெல்லாவெளி பொலிஸ் பிரிவின் கீழ் உள்ள மண்டூர் பிரதேசத்தில் 81 வயதுடைய பெண், கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள சவுக்கடி பிரதேச கடலில் 64 வயதுடைய ஆண்.

இந்த நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஜனவரி தொடக்கம் ஜூன் 30 வரையிலான 6 மாத காலப்பகுதியில் 18 வயதுக்கு உட்பட்ட 3 பெண்கள் ஒரு ஆண் உட்பட 4 சிறுவர்கள் தற்கொலை செய்துள்ளனர்.

18 வயதுக்கு மேற்பட்ட 61 ஆண்கள் 14 பெண்கள் உட்பட 79 பேர் இவ்வாறு தற்கொலை செய்துள்ளனர்.

இதில் காத்தான்குடி பொலிஸ் பிரிவில் 9 பேரும், மட்டக்களப்பு பொலிஸ் பிரிவில் 10 பேரும், வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் 10 பேரும், களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவில் 13 பேரும் அடங்குவர்.

இதேவேளை, கடந்த 2022 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் டிசெம்பர் 31 ஆம் திகதி வரை 18 வயதுக்கு உட்பட்ட 11 ஆண்கள் 4 பெண்கள் உட்பட 15 சிறுவர்களும், 18 வயதுக்கு மேற்பட்ட 113 ஆண்களும் 20 பெண்கள் உட்பட ஒருவருடத்தில் 133 பேர் தற்கொலை செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளளனர்.



# பாலின சமத்துவ அடையாளமாக விளங்குகிறது சென்னைப் பல்கலை.!

## - குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு தெரிவிப்பு



சென்னை பல்கலைக்கழகம் மற்றும் அதன் உறுப்புக் கல்லூரிகளில், ஒரு லட்சத்து 85 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவ, மாணவியர் படித்து வருகின்றனர் என்றும் பாலின சமத்துவத்தின் அடையாளமாக சென்னைப் பல்கலைக்கழகம் திகழ்கிறது எனவும் இந்திய குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு தெரிவித்துள்ளார்.

சென்னைப் பல்கலைக்கழகம் கல்வியை மேம்படுத்துவதில், இந்தியாவுக்கு பெருமை சேர்த்து வருகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் 165 ஆவது பட்டமளிப்பு விழா இன்று நடைபெற்றது.

இந்த விழாவில், குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு கலந்துகொண்டு மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார். இதன்போது அவர் உரையாற்றுகையில்,

சென்னைப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டதில் மகிழ்ச்சி. பதக்கங்கள் மற்றும் பட்டங்களை பெற்றவர்களுக்கும், பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் பல்வேறு துறைகளின் பேராசிரியர்கள், பணியாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழின் சங்க இலக்கியங்கள் இந்தியாவுக்கு மிகப்பெரிய பொக்கிஷம். திருக்குறள் அறிவுக் களஞ்சியமாக இருந்து வருகிறது. தமிழகத்தில் உள்ள கோயில்களும், சிற்பங்களும் தமிழகத் தின் கலை சிறப்பை விவரிக்கின்றன. கலை, இலக்கியம் என்று கலாசாரம் நிறைந்த மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறது.

சென்னை பல்கலைக்கழகம் மற்றும் அதன் உறுப்புக் கல்லூரிகளில், ஒரு லட்சத்து 85 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவ, மாணவியர் படித்து வருகின்றனர். பாலின சமத்துவத்தின் அடையாளமாக சென்னைப் பல்கலைக்கழகம் திகழ்கிறது. சென்னைப் பல்கலைக்கழகம் கல்வியை மேம்படுத்துவதில், இந்தியாவுக்கு பெருமை சேர்த்துவருகிறது.

1867 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பல்கலைக்கழகம், இந்தியாவில் முதன்முதலில் தொடங்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் ஒன்றாகத் திகழ்ந்து வருகிறது.

முன்னாள் இந்திய குடியரசுத் தலைவர்கள் 6 பேர் இந்த பாரம்பரியம் மிக்க பல்கலைக்கழகத்தில் படித்தவர்கள். இன்று நீங்கள் நடந்து செல்லும் அதே பாதையில் அவர்களும் சென்றுள்ளனர் என்பது உண்மையிலேயே பெருமைக் குரிய விடயம் என்று தெரிவித்தார்.

# அண்ணாமலை நடைபயணத்தில் நடிகர் விஜய் ரசிகர்கள் பங்கேற்பு?





தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை, ‘என் மண், என் மக்கள்’ என்ற பெயரில் நடைபயணம் மேற்கொண்டு வருகிறார். இந்தநிலையில், மதுரையில் அவர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நடிகர் விஜய்யின் விஜய் மக்கள் இயக்கத்தின் கொடியோடு சிலர் பங்கேற்றனர். இது தொடர்பாக புஸ்சி ஆனந்த் விளக்கம் கொடுத்துள்ளார்.

ராமேசுவரத்தில் கடந்த மாதம் 28 ஆம் திகதி தொடங்கிய அண்ணாமலையின் நடைபயணம் சென்னையில் நிறைவடைகிறது. மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா இராமேசுவரத்தில் இந்த நடைபயணத்தை தொடங்கி வைத்தார். தொடர்ச்சியாக 6 மாதங்கள் தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொண்டு மக்களை சந்திக்கிறார் அண்ணாமலை. ஜனவரி 11 ஆம் திகதி பயணத்தை முடிவு செய்கிறார்.

இந்த சூழலில் நேற்று மதுரையில் அண்ணாமலையின் ‘என் மண், என் மக்கள்’ நிகழ்வில் விஜய் மக்கள் இயக்க கொடியுடன் சிலர் பங்கேற்றனர். அது தொடர்பாக படங்கள் மற்றும் காணொளிகள் சமூக வலைதளத்தில் பரவின. இந்த சூழலில் இது தொடர்பாக விஜய் மக்கள் இயக்க பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த் விளக்கம் கொடுத்துள்ளார்.

தளபதி விஜய் மக்கள் இயக்க கொடியோடு மாற்றுக் கட்சி நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டதாக ஊடகங்கள் மற்றும் சமூக ஊடக செய்திகளில் வெளியான நபர்கள் தளபதி விஜய் மக்கள் இயக்கத்தின் எந்த பொறுப்பிலும் இல்லை. மற்றும் அவர்களுக்கும் தளபதி மக்கள் இயக்கத்துக்கும் எந்த தொடர்பும் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் என புஸ்சி ஆனந்த் தனது ருவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# ஞானவாபி மசூதியில் ஆய்வுகள் ஆரம்பம்!



இந்தியாவின் உத்தர பிரதேச மாநிலம் வாரணாசியில் அமைந்துள்ள ஞானவாபி மசூதியில் அறிவியல்பூர்வ ஆய்வை மேற்கொண்டுவரும் தொல்லியல் துறை நிபுணர்கள் பூமியை ஊடுருவி படம்பிடிக்கும் ரேடார் தொழில்நுட்பத்தை பயன்படுத்தியுள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

இந்தத் தொழில்நுட்பம் மூலமாக மசூதி நிலப்பரப்பில் எந்தவித துளையிடும் பணிகளையும் மேற்கொள்ளாமல், பூமிக்கு அடியில் புதைந்திருக்கும் கட்டமைப்பை கண்டறியமுடியுமென தொல்லியல் துறை நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

அலகாபாத் மேல்நீதிமன்றம் வழங்கிய அனுமதியைத் தொடர்ந்து, மசூதியில் அறிவியல்பூர்வ ஆய்வுப் பணிகளை தொல்லியல் துறை நிபுணர்கள் வெள்ளிக்கிழமை மீண்டும் தொடங்கினர்.

இந்த ஆய்வு இரண்டாவது நாளாக நேற்று முன்னெடுக்கப்பட்டது.

# உக்ரைன் குருதிமைய கட்டடம் மீது ரஷ்யா வான் தாக்குதல்!

ரஷ்யாவால் நடத்தப்பட்ட வான் தாக்குதலில் உக்ரைனின் வடகிழக்கு பகுதியில் உள்ள குருதிமைய கட்டடம் சேதம் அடைந்துள்ளதாக உக்ரைனின் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதலில் பொது மக்கள் பலரும் கொல்லப்பட்டுள்ளதுடன், மேலும் சிலர் காயமடைந்தும் உள்ளனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மீட்பு பணிகள் தொடர்ந்தும் இடம் பெறுகின்றன என்று தெரிவித்துள்ள அவர், இந்த தாக்குதலில், இராணுவத் தினரோ அல்லது இராணுவத்துடன் தொடர்பு கொண்ட பணியாளர்களோ பாதிப் படையவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

## பெரும் எண்ணிக்கையில் பொது மக்கள் உயிரிழப்பு

கொல்லப்பட்டவர்கள் அல்லது காயப் பட்டவர்களின் எண்ணிக்கை குறித்து எந்த விதமான தகவல்களும் இதுவரை வெளியிடப்படவில்லை.

ரஷ்யா பாரிய யுத்த குற்றத்தில் ஈடுபட்டு வருவதற்கு இந்த சம்பவம் சிறந்த உதாரணம் என அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்தத் தாக்குதல் தொடர்பாக ரஷ்யா இதுவரை தகவல் எதனையும் வெளியிடவில்லை.

கருங்கடல் பிராந்தியத்தில், ரஷ்ய எண்ணெய் தாங்கி கப்பலையும் 11 ஊழியர்களையும் உக்ரேன் தாக்கி அளித்ததற்கு பழிவாங்கும் செயலாக இந்த தாக்குதல் அமைவதாக ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

# ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களில் 78 ஆவது ஆண்டு நினைவு நாள்



உலகின் முதல் அணுகுண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட ஜப்பானின் ஹிரோஷிமா நகரத்தில், அமெரிக்காவின் அணுகுண்டுத் தாக்குதலின் 78 ஆவது ஆண்டு நினைவு நாள் இன்று அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நிலையில், முதல் குண்டுத் தாக்குதல் நடந்த ஜப்பானின் ஹிரோஷிமா நகரில் இன்று காலை 8.15 மணிக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அமைதி நினைவு பூங்காவில் நடைபெற்ற இந்த நிகழ்வில், 50 ஆயிரத்துக்கு அதிகமானோர் கலந்து கொண்டனர் என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

1945 ஆம் ஆண்டில் ஹிரோஷிமாவில் அமெரிக்கா நடத்திய அணுகுண்டு தாக்குதலில் 40 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்திருந்தனர்.

அத்துடன், மூன்று நாள்களுக்குப் பிறகு நாகசாகியில் நடத்தப்பட்ட இரண்டாவது அணுகுண்டு தாக்குதலில் 74 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானிஸ்தானில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்!

ஆப்கானிஸ்தானில் சனிக்கிழமை 5.8 ரிச்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டதாக நிலநடுக்கவியல் தேசிய மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் நேற்று இரவு 9.31 மணியளவில் 181 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்டுள்ளது.

நிலநடுக்கத்தின் மையம் ஆப்கானிஸ்தானின் இந்துகுஷ் பகுதியில் உள்ள தீர்க்கரேகையில் 36.38 டிகிரி வடக்கே அட்சரேகையிலும், கிழக்கே 70.77 டிகிரியிலும் அமைந்திருந்ததாக நில அதிர்வுக்கான தேசிய மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தின் எதிரொலியாக டெல்லியில் நில அதிர்வு உணரப்பட்டுள்ளது.

சேத விவரங்கள் எவையும் வெளியாகவில்லை எனவும் கூறப்படுகின்றது.

# ஸ்பெயின் எல்லையில் காட்டுத் தீ !



மத்திய தரைக்கடல் கடற்கரையில் ஸ்பெயின் எல்லையில் உள்ள போர்ட்போவில் காட்டுத் தீ பரவியுள்ளது.


இந்த தீப் பரவல் நேற்று ஏற்பட்டுள்ளது. இதனைக் கட்டுப் படுத்த தீயணைப்பு வீரர்கள் போராடியுள்ளனர்.

குறித்த பகுதியில் தீப் பரவல் அதிகரித்தமையால் 130 இற்கும் மேற்பட்டவர்களை அந்த பகுதியிலி ருந்து வெளியேற்றினர் என்று தீயணைப்பு வீரர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த தீ சுமார் 435 ஹெக்டேர் நிலத்தை நாசமாக்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்பெயினை பிரான்சுடன் இணைக்கும் தொடருந்து நிலைய மான போர்ட்போவின் தெற்கில் தீ பரவல் தொடர்பில் அறிவிக்கப்பட்ட சில மணிநேரங்களுக்கு பின்னர் முன்னெச்சரிக்கையாக மக்கள் ஒரே இரவில் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இதேவேளை மீட்பு பணியில், கட்டலான் செஞ்சிலுவைச் சங்கத்தின் தன்னார்வலர்கள் ஈடுபட்டுள்ளனர்.


கசூரினா
படகுச் சேவை
சேவைகள்
01. மூன்று கிலோ மீற்றர் தூரம் சுற்றிப் பார்த்தல்
02. பவளப் பாறைகள் சுற்றிப் பார்த்தல்
03. வெளிச்சவீட்டு கடற்பகுதியைச் சுற்றிப் பார்த்தல்
04. பருத்தித்தீவு சென்று வருதல்
05. நயினாதீவு சென்று வருதல்
06. காரைநகர் கடற்கோட்டையைச் சுற்றிப் பார்த்தல்
காரைநகர் கசூரினா கடலில் கண்ணாடி இழைப்படகில் பயணித்தவாறே கடலின் அடியில் பவளப்பாறைகள் மற்றும் மீன் இனங்களை கண்டு ரசிக்கக் கூடிய விதத்தில் கண்ணாடி பொருத்தப்பட்ட படகுகள் இன்னும் சில வாரங்களில் எம்மால் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றன.
கசூரினா படகுச்சேவை தொடர்புகளுக்கு : 077 078 3949